1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னையை தவிர மற்ற இடங்களில் 33 சதவீதம் சலுகையோடு பஸ்பாஸ் வழங்கப்படுகிறது. அதில் நிச்சயமாக தடையிருப்பதற்கு வாய்ப்பில்லை. 33 சதவீத சலுகையோடு அதனைப் பெற்றுக்கொள்வதில் அவர்களுக்கு எந்தவிதமான தடையும் இருக்காது என்று கருதுகிறேன். அதில் தடை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிந்தால், எனக்குச் சொன்னால் நடவடிக்கையெடுக்கலாம்.

(முற்பகல் 11–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

வாகன வரிகள்.

488—(*வினா எண் 13830) டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. யு. பி. மாதையன் மற்றும் திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனைத்து வாகன வரிகளையும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திலேயே பெற்றுக் கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுதுள்ள மோட்டார் வாகன வரி வசூலிக்கும் முறை சீரிய முறையில் நடைபெற்று வருவதால், இம்முறையே தொடர்ந்து நீடித்து வரலாம் என அரசு கருதுகிறது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவாக்கல்

489—(*வினா எண் 8322)—திரு. பி. என். இராமச்சந்திரன் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மீனதுறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னை வள்ளுவர் கோட்டத்தை விரிவுபடுத்தி அங்கு திருக்குறள் ஆய்வகம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?